## வள்ளுவன் தமிழ் மையம் (Valluvan Tamil Academy)

### திருக்குறள் தேனீ போட்டியின் விதிமுறைகள் (Kural Bee Guidelines)

திருக்குறள் தேனீ போட்டியின் முக்கிய குறிக்கோள் - வள்ளுவதை நம் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துவது மற்றும் அதில் கூறப்பட்டுள்ள கருத்தியல்களையும் மிக உயரிய சிந்தனைகளையும் நமது மாணவர்களின் ஆழ்மனதில் பதியவைப்பதற்கும் ஆகும். மேலும் FETNA போன்ற நிகழ்ச்சிகளில் நடத்தப்படும் திருக்குறள்/இலக்கிய வினா விடை போட்டியில் பங்குபெறுவதற்கான ஒத்திகை போலவும் இம்முயற்சியினை கருதலாம்.

இந்தப் போட்டியின் பங்குபெற தற்சமயம் நிலை 3 முதல் நிலை 7 வரையில் உள்ள அனைத்து மாணவர்களும் தகுதி பெறுவர்.

| சுற்றுக்கள் | நிலை/குழு | படிக்கவேண்டிய திருக்குறள் அதிகாரங்கள் *இந்த அதிகாரத்தில் உள்ள கடினமான சொற்களுக்கு பொருள் தெரிந்தால் போதுமானது | மனப்பாடம் செய்யவேண்டிய அதிகாரங்கள் |
|---|---|---|---|
| **சுற்று 1+சுற்று 2+சுற்று 3** | நிலை - 3 | - | வான்சிறப்பு(2)<br>அன்புடைமை(8) |
| **சுற்று 1+சுற்று 2+சுற்று 3 + சுற்று 4** | நிலை - 4 | பொறையுடைமை(16) | கல்வி(40)<br>வாய்மை(30) |

| | | | |
|---|---|---|---|
| **சுற்று 1+ சுற்று 2 + சுற்று 3 + சுற்று 4+ சுற்று 5 (Optional: Tie - Breaker)** | நிலை - 5 & இடைநிலை | அழுக்காறாமை(17) | இனியவை கூறல் (10) அடக்கம் உடைமை(13) |
| **சுற்று 1+ சுற்று 2 + சுற்று 3 + சுற்று 4+ சுற்று 5 (Optional: Tie - Breaker)** | நிலை - 6 | செங்கோன்மை(55) | செய்ந்நன்றியறிதல்(11) ஒழுக்கம் உடைமை(14) |
| **சுற்று 1+ சுற்று 2 + சுற்று 3 + சுற்று 4+ சுற்று 5 (Optional: Tie - Breaker)** | நிலை – 7 , மேல்நிலை , நிலை 8 | ஊக்கம் உடைமை(60) | இன்னா செய்யாமை உழவு (104) |

பொதுவான வழிமுறைகள்:

நிலை - 3 (குழு -1) நிலை - 4 (குழு -2) நிலை -5 &இடைநிலை (குழு -3) நிலை -6(குழு -4) நிலை 7, மேல்நிலை , நிலை 8(குழு -5)

1. நிலை-3 (குழு -1) மொத்தம் மூன்று(சுற்று -1, சுற்று -2 , சுற்று 3) சுற்றுக்கள் கொடுக்கப்படும் /உட்படுத்தப்படுவர். இதில் எதுவும் நீக்குதல் சுற்று கிடையாது.
2. நிலை-4 (குழு-2) மொத்தம் நான்கு (சுற்று -1, சுற்று -2 , சுற்று 3, சுற்று - 4) சுற்றுக்கள் கொடுக்கப்படும் /உட்படுத்தப்படுவர். இதில் எதுவும் நீக்குதல் சுற்று கிடையாது.
3. நிலை-5 &இடைநிலை (குழு-3), நிலை-6(குழு-4), நிலை-7&மேல்நிலை(குழு-5)ல் உள்ள மாணவர்களுக்கு மொத்தம் நான்கு சுற்றுக்கள்+ சம நிலை உடைப்பு கொடுக்கப்படும் /உட்படுத்தப்படுவர்.

4. போட்டியாளர்கள் அவர்களுக்கு கேட்கப்பட்ட கேள்விகளுக்கு

முழுமையாகவும் தெளிவாகவும் பதில் கூற வேண்டும்.

5. ஒவ்வொரு கேள்விகளுக்கும் பதில் அளிக்க 1 நிமிடம் அளிக்கப்படும்

6. நான்கு சுற்றுக்கள் முடிந்த பின் அதிகம் புள்ளிகள் எடுத்த மாணவர்கள் வெற்றியாளர்களாக கருத படுவார்கள்.

7. தேவைப்படும் போது சமநிலை உடைப்பு சுற்றிற்கும் போட்டியாளர்கள் உட்படுத்தப்படுவார்கள்.

8. போட்டியில் வெற்றிபெற மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்ட திருக்குறளை மனப்படமாக மற்றும் பொருளுணர்ந்து படித்தல் அவசியம்

9. அனைத்து சுற்றுக்களும் முடிந்த பின்னர் அதிக புள்ளிகள் எடுத்த மாணவர்கள் வெற்றியாளர்களாக அறிவிக்கப்படுவார்கள்

| | |
|---|---|
| சுற்று 1 | நெறியாளர்கள் கூறும் அதிகாரத்தில் இருந்து எதாவது ஒரு திருக்குறளை பொருளுடன் கூற வேண்டும்.<br>உ .ம் -புலால் மறுத்தல் அதிகாரத்தில் இருந்து ஒரு திருக்குறளை கூறவும்:<br><br>“தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்<br>எங்ஙனம் ஆளும் அருள்”<br><br>**பொருளுடன் விளக்கினால் கூடுதல் .5 புள்ளிகள்<br>** மனப்பாடம் செய்யவேண்டிய அதிகாரத்தில் இருந்து கேட்கப்படும் |

| | |
|---|---|
| சுற்று 2 | ஒரு திருக்குறளின் தொடக்கம் அல்லது இறுதியினை கொடுத்தால் அந்த திருக்குறளை முழுமையாக கூற வேண்டும்.<br><br>உ.ம்- தலை பிரிந்த ஊன் என முடியும் குறளை கூறவும்<br><br>“செயிரின் தலைப்பிரிந்த காட்சியா ருண்ணார்<br>உயிரின் தலைப்பிரிந்த ஊன்”<br><br>**பொருளுடன் விளக்கினால் கூடுதல் .5 புள்ளிகள்<br>** மனப்பாடம் செய்யவேண்டிய அதிகாரத்தில் இருந்து கேட்கப்படும் |
| சுற்று 3 | ஒரு திருக்குறளின் பொருளை அல்லது அது குறிக்கும் வார்த்தைகளை கூறினால் அதன் மூலம் அந்த திருக்குறளை முழுமையாக கூற வேண்டும்<br>உ.ம் கை கூப்பி என்ற சொல் உள்ள திருக்குறளை கூறவும்:<br>"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி<br>எல்லா உயிருந் தொழும்”<br><br>** மனப்பாடம் செய்யவேண்டிய அதிகாரத்தில் இருந்து கேட்கப்படும |
| சுற்று 4 | கொடுக்கப்படும் திருக்குறளின் உள்ள கடினமான வார்த்தைகளுக்கு பொருள் கூற வேண்டும்<br>படைகொண்டார் என்பதற்கு பொருள் என்ன ?<br>படைகொண்டார் - படைக் கருவியைப் பயன்படுத்துவோர்/ போர் செய்பவர் |
| சுற்று 5 (Tie Breaker) | சம நிலை உடைப்பு (தேவைப்பட்டால்) - நெறியாளர்கள் கூறும் திருக்குறளுக்கான தங்கள் கருத்தினை பற்றி இரண்டு நிமிடங்கள் பேச வேண்டும் |

Rubrics:

| Group* | Category/Rounds | Number of points per round per question+ add points for meaning | Time limit | Grace Period |
|---|---|---|---|---|
| All groups | **1** | 1+.5 | 1 min | None |
| | **2** | 1+.5 | 1 min | None |
| | **3** | 1 | 1 min | None |
| | **4** | 1 | 1 min | None |
| | **5** | 1 | 1 min | None |

***as of Sep 30th 2023 based on given data at my.valluvantamil.org**